

சிவகங்கை மாவட்டக் கழக செய்தித் தொடர்பு அமைப்பாளராக நியமிக்கப்பட்ட சிவகங்கை நகர் மன்ற உறுப்பினர் அ.அயூப்கான் மாவட்ட கழக செயலாளர், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோரை சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### நகைக் கடன் நிபந்தனைகள்: தி.மு.க. விவசாய அணி – விவசாய சங்கங்கள் இணைந்து

# ஒன்றிய அரசைக் கண்டித்து தஞ்சையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் வேண்டுகோள்!

தஞ்சை, மே 29-

தி.மு.க. விவசாய அணி மற்றும் அனைத்து விவசாய சங்கங்கள், காவிரி டெல்டா மாவட்டங்கள் இணைந்து நடத்தும் கார்ப்ரேட் கம்பெனிகளுக்கு ஆதரவாக விவசாயிகள் - நடுத்தர, சாதாரண மக்கள் மற்றும் வணிகர்களுக்கு எதிராக ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ள நகைக் கடன் நிபந்தனைகளை உடனடியாக கைவிட வலியுறுத்தி நாளை (30.5.2025) தஞ்சாவூர், தலைமை தபால் நிலையம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெறுகிறது.

இதில் தி.மு.க. விவசாய அணி நிர்வாகிகள், தோழர்கள், விவசாயிகள் அனைவரும் அணி திரள தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது வேண்டுகோள் வருமாறு:-

தான் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதலே ஒன்றிய பா.ஜ.க. அரசு கார்ப்ரேட் கம்பெனிகளுக்கு ஆதவான கொள்கைகளையே அமல்படுத்தி, விவசாயிகள் - தொழிலாளர்கள் - ஏழை மக்களை மென்மேலும் பாதிக்கும் கொள்கைகளையே செயல்படுத்தி, சொல்லொணா துயரத்தில் ஆழ்த்தி வருகிறது. தேசிய வங்கிகளில் சாமானிய மக்களுக்கும் விவசாயிகளுக்கு கடன் வழங்காமல், பெரும் நிறுவனங்களுக்கு கடன்களை அள்ளி வழங்கி, பல லட்சம் கோடி ரூபாய் கடன்களை வாராக் கடன் என்று சொல்லி ஒன்றிய பா.ஜ.க. அரசு தள்ளுபடி செய்கிறது. சாமானிய மக்களின் வரிப்பணமான பல லட்சம் கோடி ரூபாய் வரிச் சலுகைகளையும் பணக்காரர்களுக்கு வழங்கி வருகிறது மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு.

விவசாயிகள், ஏழை மக்கள், நடுத்தர மக்கள் தங்களிடம் உள்ள நகைகளை கூட்டுறவு மற்றும் வங்கிகளில் அடமானம் வைத்து விவசாய மற்றும் அவசரத் தேவைகளுக்காக பயன்படுத்தி வந்தனர். அடகு வைத்த நகையை திருப்ப முடியாத மக்கள் வட்டியை மட்டும் கட்டி மறுஅடமானம் வைப்பதும் நடைமுறையில் இருந்து வருகிறது. தற்போது ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையான இந்திய ரிசர்வ் வங்கி, “இனிமேல் வங்கிகளில் நகை கடன் பெற வேண்டுமெனில் நகை வாங்கிய ரசீது அல்லது தகுந்த ஆவணம் தர வேண்டும், தனியாரிடம் வாங்கிய தங்கக் காசுகளுக்கு கடன் பெற முடியாது, ஏற்கனவே வாங்கி நகை கடனை முழுமையாக செலுத்தியவர்களுக்கு மட்டுமே புதிய நகை கடன் வழங்கப்படும், விவசாயி களுக்கு நகையை புதுப்பித்து மீண்டும் கடன் பெறுவது தடை செய்யப்பட்டுள்ளது” போன்ற புதிய நிபந்தனை களை விதித்து விவசாயிகள் - தொழிலாளர்கள் - ஏழை மக்களை வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையான இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ள நகைக் கடன் நிபந்தனைகளை உடனடியாக கைவிட வலியுறுத்தி தி.மு.க. விவசாய அணி மற்றும் அனைத்து விவசாய சங்கங்கள், காவிரி டெல்டா மாவட்டங்கள் இணைந்து வருகிற 30.5.2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் தஞ்சாவூர், தலைமை தபால் நிலையம் எதிரில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடத்துகிறது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. விவசாய அணியைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் - கழக விவசாய அணித் தோழர்கள் மற்றும் அனைத்து விவசாய சங்கங்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சிவகங்கை – ராமநாதபுரம் மாவட்ட வழக்கறிஞரணி

# ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் கூட்டம்!

## கே.ஆர்.பெரியகருப்பன் - என்.ஆர்.இளங்கோ எம்.பி. பங்கேற்பு!

சிவகங்கை. மே.29

சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட வழக்கறிஞரணி நிர்வாகிகள் ,மற்றும் சிவகங்கை ராமநாதபுரம் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் நாளை 30ஆம்தேதிசிவகங்கையில் நடைபெறுகிறது. சிவகங்கை மாவட்ட கழக வழக்கறிஞரணி அமைப்பாளர் எஸ். பாஸ்கரன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

நாளை (30ம் தேதி) சிவகங்கை ராமநாதபுரம் மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர்கள், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பங்கேற்கும் கூட்டம் மாலை 4 மணி அளவில் சிவகங்கை நேரு பஜார் சாலையில் உள்ள ராயல் மகாலில் சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி தலைமையில் ராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் முன்னிலையில் நடைபெறுகிறது.

கூட்டுறவுத்துறை அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கேஆர்பெரிய கருப்பன் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார். இந்த கூட்டத்தில் 2026ல் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் நிர்வாகிகள் ஆற்ற வேண்டிய பணிகள் பி.எல்.சி.பாகமுகவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. சிறப்புரை ஆற்றுகிறார். முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழரசிரவிக்குமார்,முருகேசன், ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். இந்த கூட்டத்தில் சிவகங்கை ராமநாதபுரம் மாவட்ட கழக நிர்வாகி கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பி .எல் .சி முகவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கூட்டத்திற் கான ஏற்பாடுகளை மாவட்ட வழக்கறிஞர் சங்க அமைப்பாளர் எஸ். பாஸ்கரன் தலைமையில் நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.



கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பில் அறிவிக்கப்பட்ட கல்வி உதவித் தொகையை விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம், கழுமரம், கோட்டகம் சார்ந்த செந்தில் முருகன் சாலை விபத்தில் மறைவெய்தியதை, அவரின் குடும்பத்தினருக்கு நேரில் சென்று ஆறுதல் தெரிவித்து நிதியுதவியை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி, விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் Dr.பொன்.கௌதமசிகாமணி ரூ.25,000 காசோலையை வழங்கினார். மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர், ஒன்றிய செயலாளர் மு.தங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஈரோடு தெற்கு, ஈரோடு மத்திய மற்றும் கரூர் மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 30.05.2025 வெள்ளிக்கிழமை | காலை 10.00 மணி | ஈரோடு தெற்கு | தங்கம் மஹால், மேட்டுக்கடை, பெருந்துறை சாலை, ஈரோடு. |
| | மாலை 3.00 மணி | ஈரோடு மத்திய | விருட்சம் ஹால், பைபாஸ் சாலை, வாவிக்கடை, பெருந்துறை. |
| 31.05.2025 சனிக்கிழமை | காலை 9.30 மணி | கரூர் | ஆர்த்தி அழகம்மை மஹால், திண்ணப்பா தியேட்டர் அருகில், கரூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 27-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பப் பதிவு!

# மாணவர்கள் நலன் கருதி மீண்டும் மே 30-ஆம் தேதி தொடங்கும்!

## அமைச்சர் கோவி. செழியன் தகவல்!

சென்னை, மே 29-

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பப் பதிவு 7.05.2025 அன்று தொடங்கியது, நேற்று முன்தினம் (27.05.2025) முடிவடைந்ததால் மாணவர்களின் நலன் கருதி மீண்டும் 30.05.2025 அன்று தொடங்கும் என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளதாவது:-



அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 2025-26ம் கல்வியாண்டிற்கான மாணாக்கர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் 07.05.2025 அன்று முதல் 27.05.2025 வரை, www.tngasa.in என்ற இணையதள வாயிலாக பெறப்பட்டது. இதுவரை 2,25,705 விண்ணப்பங் கள் இணைய தளம் வாயிலாக பதிவு செய்யப்பட்டுள்ளன. 1,08,619 மாணவிகள், 76,065 மாணவர்கள் மற்றும் 78 மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 1,84,762 மாணாக்கர்கள் கட்டணம் செலுத்தி உள்ளனர்.

சிறப்புப் பிரிவு மாணாக்கர்களுக்கான தரவரிசைப் பட்டியல் 29.05.2025 அன்று கல்லூரிகளில் வெளியிட ப்படும். பொதுப்பிரிவினருக்கான தரவரிசைப் பட்டியல் 30.05.2025 அன்று கல்லூரிகளில் வெளியிடப்படும். கல்லூரித் தகவல் பலகைகளில் தரவரிசைப் பட்டியல்கள் ஒட்டப்பட்டு, கல்லூரி இணைய தளங்களிலும் வெளியிடப்படும். மேலும், 176 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் சிறப்பு ஒதுக்கீட்டுப் பிரிவு மற்றும் பொது கலந்தாய்விற்கான தகவல்கள், குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் வாயிலாக மாணாக்கர்களுக்கு அந்தந்த கல்லூரிகளிலிருந்து தெரிவிக்கப்படும்.

27.05.2025ம் தேதிக்குள் விண்ணப்பிக்கத் தவறிய மாணாக்கர்கள் மற்றும் துணைத் தேர்வு எழுதும் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் மீண்டும் 30.05.2025 அன்று முதல் இணையதளம் வாயிலாக விண்ணப்பப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

முதலாம் ஆண்டு மாணாக்கர்களுக்கு வகுப்புகள் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு 30.06.2025இல் துவங்கும்

29.05.2025- சிறப்புப் பிரிவு மாணாக்கர்களுக்கான தர வரிசைப் பட்டியல் கல்லூரிகளின் இணைய தளங்களிலும், கல்லூரி தகவல் பலகைகளிலும் வெளி யிடப்படும்.

30.05.2025 - பொதுப்பிரிவினருக்கான தரவரிசைப் பட்டியல் கல்லூரிகளின் இணைய தளங்களிலும், கல்லூரி தகவல் பலகைகளிலும் வெளி யிடப்படும்.

02.06.2025 மற்றும் 03.06.2025 - சிறப்பு ஒதுக்கீட்டுப் பிரிவு மாணாக்கர்களுக்கான கலந்தாய்வு (மாற்றுத் திறனாளிகள் / விளையாட்டு வீரர்கள் / முன்னாள் இராணுவத்தினர் / அந்தமான், நிகோபார் தமிழ் மாணாக்கர்கள் / தேசிய மாணவர் படை/ பாதுகாப்புப் படைவீரர்கள்)

04.06.2025 முதல் பொதுக் கலந்தாய்வு

14.06.2025 வரை- தொடர் கலந்தாய்வு மற்றும் மாணாக்கர் சேர்க்கை

30.06.2025- முதலாம் ஆண்டு மாணாக்கர்களுக்கு வகுப்புகள் துவங்கும் நாள்

இவ்வாறு உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

### தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி ஏற்பாட்டில்

# 10,12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியருக்கு பாராட்டு!

## தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. – தெற்கு மாவட்டச் செயலாளர் தி.பழநிவேல் மாணவர்களுக்கு பரிசளித்து பாராட்டினர்!

தஞ்சாவூர், மே.29-

தஞ்சை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவ, மாணவியருக்கு தஞ்சை ராமநாதன் ரவுண்டானா அருகில் உள்ள தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பாராட்டு விழா நடைபெற்றது.

தஞ்சை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட, திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி, மன்னார்குடி சட்டமன்ற தொகுதியில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பயின்று 10 ம் வகுப்பு மற்றும் +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியரை ஊக்குவிக்கும் விதமாக தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி ஏற்பாட்டில் பாராட்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தெற்கு மாவட்டச் செயலாளர் தி.பழநிவேல் ஆகியோர் கலந்துகொண்டு 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியருக்கு பரிசுகளை வழங்கி, வாழ்த்தினார்கள்

அதனை தொடர்ந்து கலந்து கொண்ட அனைவருக்கும் தென்னங்கன்று வழங்கப்பட்டது.

இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் டி. கே.ஜி.நீலமேகம், என். அசோக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.இராமச்சந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், தஞ்சை மாநகரச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அண்ணாதுரை உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் நகரம், 17 வது வார்டு, தாமரைக்குளம் பகுதியைச் சேர்ந்த 10க்கும் மேற்பட்டவர்கள் விழா ஒன்றிற்கு செல்லும் வழியில் சாலை விபத்துக்குள்ளானதை அறிந்து முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு நேரில் சென்று உடல் நலம் குறித்து நலம் விசாரித்து, ஆறுதல் கூறினார். உடன் விழுப்புரம் கிழக்கு நகர கழக பொறுப்பாளர் S.வெற்றிவேல், கோலியனூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் E.சச்சிதானந்தம், ஒன்றிய அவைத் தலைவர் வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் கோல்டு வெங்கடேசன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் இரா.கேசவன், வார்டு செயலாளர் மணிவண்ணன், துணை செயலாளர் சக்திவேல், ராஜி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.